# SERMON ON THE MOUNT

A paraphrase of the 5th, 6th and 7th Chapters of Matthew.

## இயேசுநாதர் மலையின்மேற் சொன்ன பிரசங்கத்தின்

# விஸ்தரிப்பு.

அகந்தையை விட்டு மனத் தாழ்மையோடே பராபரனுடைய சித்தத்திற்கேற்க நடக்கிறவர்கள் பரலோக நன்மைகளை அடைவார்கள் ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறவர்கள் பராபரனாலே ஆறுதலடைவார்கள் ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

அகங்காரமுங் கோபமுமில்லாமற் சாந்தமாய் நடக்கிறவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள் ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

அநீதியைத் தவிர்ந்து எவ்விதத்திலும் நீதியைச் செய்யும் படிக்குப் பசித்தாகத்தைப்போல விருப்பமுள்ளவர்கள் சந்தோஷத்தை அடைவார்கள் ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

3d Ed.] AMERICAN MISSION PRESS,—JAFFNA [10,000
1843.

பிறருக்குக் குரூரஞ் செய்யாமல் இரக்கங் கொண்டிருக்கிறவர்களுக்குப் பராபரனுடைய இரக்கங் கிடைக்கும் ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

நகாத இச்சைகளை அடக்கிப் பராபரனுக் கேற்ற பரிசுத்த இருதயத்தையும் பரிசுத்த குணங்களையுங் கொண்டிருப்பவர்கள் பராபரனைத் தரிசிப்பார்கள் ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

சண்டைகளைச் செய்யாமற் சமாதானத்தை யுண்டாக்குகிறவர்கள் தேவ புத்திரராய் இருப்பார்கள் ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

நீதியினிமித்தம் உலகத்தாராலே துன்பப் படுகிறவர்கள் வான இராச்சியத்திலுள்ள சந்தோஷிக்களை அடைவார்கள் ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

நீங்கள் என்னை விசுவாசித்ததின் நிமித்தம் மனிதர் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்திப் பலவித தீமையான வசனங்களைப் பொய்யாய் எடுத்துச் சொல்லும்பொழுது உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படித் துன்பப்படுத்தினார்களென்றும் உங்களுக்குப் பரமண்டலத்திலே மிகுந்த பலன் கிடைக்குமென்றும் அறிந்து சந்தோஷித்துக் களிகூருங்கள்.

உப்பானது போசனங்களுக்கு நல்ல ருசியைக் கொடுக்கிறதற்கும் அவைகள் பழுதுபடாமற் காக்கிறதற்குமான வஸ்துவாயிருப்பது போல நீங்களும் உலகத்தாருக்கு மெஞ்ஞா

ணத்தையும் நற்குணத்தையும் உண்டாக்குகிற
வர்களாய் எவர்களும் உங்களை என்னுடைய சீ
ஷர்களென்று அறியும்படி நடக்கக் கடவீர்க
ள். அப்படி நடவாவிட்டால் மனிதர் எடுத்து
வெளியே எறிந்து காலினால் மிதிபடுகிற சாரமி
ல்லாத உப்பைப்போல நீங்களுந் தள்ளப்பட்
டுக் கெட்டுப் போவீர்கள். அப்பொழுது உல
கத்தாருக்கு வேறாலே பிரயோசனங் கிடை
க்கும்.

மேலும் இருளடைந்திருக்கிற உலகத்தாரு
க்கு உங்கள் பரிசுத்தமான நடையினாலுஞ் சத்
திய உபதேசங்களினாலும் ஒளியைப்போலிரு
க்க வேண்டும். ஒரு மலையின்மேல் உண்டாக
ப் பட்டிருக்கிற பட்டினம் எவர்களுக்குந்
தோற்றமாயிருப்பதுபோல உங்கள் பரிசுத்த
குணங்களும் எவர்களுக்குந் தோற்றப்பட்டிரு
க்கக் கடவது. அல்லாமலும் எவரும் ஒரு வி
ளக்கைக் கொளுத்தினால் வீட்டிலுள்ள யாவரு
க்குந் தெரியும்படி ஒரு விளக்குத் தண்டின்
மேல் ஏற்றி வைக்கிறதேயன்றி அதை யாதொ
ன்றினால் மூடி வைக்கமாட்டார்கள். அதுபோ
ல நீங்களும் உங்கள் அறிவையும் பரிசுத்த கு
ணத்தையும் எவர்களுக்குந் தெரிய வெளிப்படு
த்தக் கடவீர்கள். அப்பொழுது மனிதர் உங்
கள் நற்கிரியைகளைக் கண்டு உங்களைப் பின்பற்
றிப் பரமண்டலத்திலிருக்கிற உங்கள் பரமபி
தாவையும் புகழ்வார்கள்.

அன்றியும் மோசேயிட்ட பிரமாணங்களை
யுந் தீர்க்கதரிசிகள் சொன்ன வாக்கியங்களையுந்

தள்ளிவிட வந்தேனென்று எண்ணிக் கொள்
ளாதிருங்கள். அவைகளைத் தள்ளிவிடும்படிக்க
ல்ல நிறைவேற்றும்படிக்கே வந்தேன். மனி
தர்களுக்கு இரட்சிப்புண்டாகும்படிக்கு அ
வைகளெல்லாம் நிறைவேற வேண்டுவதாயி
ருக்கின்றதே. ஆகையாற் பூமியும் வானமும்
அழிந்துபோனாலும் அந்தப் பிரமாணங்கள் மு
ழுவதும் நிறைவேறுவதன்றி அவைகளில் யா
தேனும் அழிந்துபோவதில்லை. அப்படியிரு
க்க ஒருவன் வந்து இந்தப் பிரமாணங்களில் மி
கவுஞ் சிறிய ஒரு கற்பனையையாகிலுந் தவறி ந
டக்கப் போதித்தால் அவன் பரலோக இராச்
சியத்திலே மிகவுஞ் சிறியவனாயிருப்பான். அ
வைகளைத் தானுங் கைக்கொண்டு பிறருக்கும்
போதித்து வருகிறவன் எவனோ அவன் பர
லோக இராச்சியத்திலே பெரியவனாயிருப்பா
ன். ஆதலால் ஒரு பிரமாணத்தின்படி செய்து
ம் பின்னொரு பிரமாணத்தின்படி செய்யாம
லும் இருக்கிற வேதபாரகர் பரிசேயரைப்
போல் நீங்களும் இருந்தால், எவ்விதத்திலும்
வான இராச்சியத்திலே பிரவேசிக்க மாட்டீர்க
ளென்று உண்மையாய் உங்களுக்குச் சொல்
லுகிறேன்.

கொலைசெய்தல் ஆகாதென்றும் ஒருவன்
கொலைசெய்தால் அவன் நியாயாதிபதிகளால்
மரண ஆக்கினையை அடைவானென்றும் முன்
னோர்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேள்விப்
பட்டிருக்கிறீர்களே. ஒருவன் பிறனுடைய சீ
வனைக் கொல்வது மாத்திரமல்ல அவன் மே

லே அநியாயமாய்க் கோபங்கொண்டாலும்
பராபரனாலே யிருந்த ஆக்கினைக்குள்ளாகத் தீ
ர்க்கப்படுவான். அல்லாமலும் அநியாயமாக
ப் பிறனை நோக்கி நீ வீணனென்று சொல்லு
கிறவன் அதிக தண்டனை அடைவான். பிறனை
ப் பயித்தியகாரனென்று அநியாயமாய்ச் சொ
ல்லுகிறவன் நரகாக்கினைக்கு உள்ளாக்கப் படு
வான். அப்படியிருப்பதினால் நீங்கள் சகல
விரோதங்களையுங் கோபத்தையுங் குரோதத்
தையுந் தள்ளி எல்லாருடனேயுஞ் சமாதானமா
யும் அன்பாயும் இருக்கக்கடவீர்கள்.

அன்றியும் நீ ஒரு காணிக்கையைச் செலுத்
தும்படிக்கு அதைப் பீடத்துக்கு முன்னே
கொண்டு போகுங் காலத்திலே பிறனொருவனு
க்கு உன்மேல் யாதொரு குறையுண்டென்று
நினைத்தாயேயாகில் உன் காணிக்கையை அவ்வி
டத்திலே வைத்துவிட்டுப்போய் அவனுடனே
சமாதானம் பண்ணிக்கொண்டு திரும்பவந்து
உன் காணிக்கையைச் செலுத்து. அல்லது நீ
ஒருவனுக்குக் கொடுக்கவேண்டிய கடனை அவ
னுக்குக் கொடுத்துத் தீராததின் நிமித்தம் நி
யாயாதிபதியிடத்திலே முறையிடப் போவா
னே ஆகில், இடைவழியிலே போய் அவனை
ச் சந்தித்து அவனுடனே நல்மனம் பொருந்
தினாயாக. அப்படிச் செய்யாவிட்டால் அவ
ன் உன்னை நியாயாதிபதியிடத்திலே ஒப்புவிக்
க நியாயாதிபதி உன்னைச் சேவகன் இடத்திலே
கொடுத்துக் காவற்கூடத்திற் போடுவிப்பான்.
அப்பொழுது நீ உன் கடனை முற்றாக இறுக்கு

றவரைக்கும் அங்கேயிருந்து விடுதலையாக்கப்ப
டுவதில்லையென்று உண்மையாய் உனக்குச்
சொல்லுகிறேன்.

பின்னும் விபசாரஞ் செய்யாதிருப்பாயாக
வென்று முன்னோர்களுக்குச் சொல்லப்பட்
டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களே. விப
சாரஞ்செய்தலை மாத்திரமல்ல விபசாரஞ்செ
ய்வதற்கேதுவான நினைவுகளையும் இச்சைகளை
யுந் தள்ளவேண்டும். ஒருவன் ஒரு இஸ்திரி
யை நோக்கி அவள்மேல் இச்சைவைக்கிற மாத்
திரத்திலே அவளுடனே அவன் தன்னிருதய
த்திலே விபசாரஞ் செய்தானென்று நான் உங்
களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் உன் க
ண்ணைப் போலானாலும் உன் கையைப்போலா
லாலும் இருக்கிற ஒரு பொருள் நீ மோட்சம
டைவதற்கு இடைஞ்சலாயிருந்தால் அதை
த் தள்ளிப்போடு. அதினிமித்தம் நீ நரகத்தி
லே தள்ளப்படுவதைப்பார்க்க அந்தப் பொரு
ள் உனக்கில்லாமல் இருக்கிறது நலம்.

பின்னுந் தன் மனைவியைத் தள்ளி விடவே
ண்டும் என்றிருக்கிறவன் தள்ளுதலின் சீட்டை
அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று சொல
லப்பட்டிருக்கின்றதே. அதைக் குறித்து நான்
உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒருவன் தன்னு
டைய மனைவி விபசாரியாயிருக்கக் கண்டால்
அவளைத் தள்ளிவிடலாம். அப்படியில்லாதிரு
க்கத் தன் மனைவியைத் தள்ளிவிட அவள் போ
ய் வேறொருவனை விவாகம்பண்ணுவாளேயெ
ன்றால் அவளை இவனே விபசாரஞ்செய்யப்

பண்ணுகிறான். தள்ளப்பட்டவளை விவாகஞ் செய்கிறவனும் விபசாரஞ் செய்கிறான்.

பின்னும் பொய்ச்சத்தியம் பண்ண வேண்டாமென்றும் நீயிடும் ஆணைகளைப் பராபரனுக்கு முன்பாக நேர்மையுடனே செய்ய வேண்டுமென்றும் முன்னோர்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். அதோடே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் எவ்விதத்திலுஞ் சத்தியம் பண்ணவேண்டாம். வானம் பராபரனுடைய பத்திராசனமாயிருக்கிறபடியால் அதைக்கொண்டும் பூமி அவருடைய பாதபடியாய் இருக்கிறபடியால் அதைக்கொண்டும் எருசலேம் பெரிய இராசாவுடைய பட்டினமாகையால் அதைக்கொண்டுஞ் சத்தியம்பண்ணலாகாது. உங்கள் தலையின் மயிரைக் கறுப்பாகவென்கிலும் வெண்மையாகவென்கிலும் மாற்ற மாட்டீர்கள். ஆகையால் அதைக்கொண்டுஞ் சத்தியம் பண்ணலாகாது. நீங்கள் ஆம் என்பதை ஆமென்றும் அல்லவென்பதை அல்லவென்றும் மாத்திரஞ் சொல்லக்கடவீர்கள். அதைத் தவிர்ந்தது பசாசினால் உண்டாயிருக்கிறதென்றறியலாம்.

பின்னும் ஒருவன் மற்றொருவனுடைய பல்லையுடைத்தால் அவனுடைய பல்லையும் அதற்கு மாறாக உடைக்கவேண்டுமென்றுங் கண்ணைக் கெடுத்தால் அவனுடைய கண்ணையும் அப்படியே கெடுக்க வேண்டுமென்றுஞ் சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆகிலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒரு

வன் வந்து வலது கன்னத்தில் அடித்தால் மற்றக் கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக் கொடுங்கள். உங்கள் வஸ்திரங்களில் ஒன்றை எடுத்துக்கொள்ள வந்தால் மற்ற வஸ்திரத்தையும் அவனுக்குக் கொடுத்துவிடுங்கள். உபத்திரவப்பட்டு வந்து உங்களிடத்திற் பிச்சை கேட்கிறவனுக்குக் கொடுங்கள். ஒருவன் உங்களிடத்திலே கடன் வாங்க விரும்பினால் அவனுக்கு முகத்தைக் கோடவையாதிருங்கள்.

பின்னும் உனக்கடுத்தவனை நேசிக்கவும் பகைஞனைப் பகைக்கவும் வேண்டுமென்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆகிலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பரமபிதாவாகிய பராபரன் பொல்லாதவர்களுக்கும் நல்லவர்களுக்குஞ் சூரியன் சரியாய்ப் பிரகாசிக்கவும் நீதயுள்ளவர்களுக்கும் அநீதியுள்ளவர்களுக்குஞ் சரியாக மழைவருஷிக்கவும் பண்ணுகிறவரானபடியினாலே நீங்களும் அவருக்குப் பிள்ளைகளாயிருக்கும்படிக்கு உங்கள் சத்துருக்களை நேசித்து உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்து உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக வேண்டுதல்பண்ணக்கடவீர்கள். உங்களைச் சிநேகிக்கிறவர்களை மாத்திரம் நீங்கள் சிநேகிப்பீர்களேயானால் உங்களுக்கென்ன பலன் வரும்? அநீதயுள்ள ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்களே. அல்லது உங்கள் சுற்றத்தாரை மாத்திரம் நீங்கள் வாழ்த்திக் கொள்வீர்களானால்

அதினாலே நீங்கள் என்ன விசேஷிந் செய்கிறீர்கள்? அஞ்ஞானிகளும் அப்படிச் செய்கிறார்களல்லவோ. ஆகையாற் பரமண்டலங்களிலுள்ள உங்கள் பிதாப் பூரண சற்குணராயிருப்பதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்.

பின்னும் நீங்கள் தருமங்களைச் செய்யும்பொழுதும் உபவாசங்களைப் பண்ணும்பொழுதும் மனிதர்கள் கண்டு உங்களை மெய்ச்சிக்கொள்ளும்பொருட்டாய்ச் செய்ய வேண்டாம். அப்படிச் செய்தால் அதினாலே உங்களுக்குப் பாவமன்றி பலன் வராது.

ஆகையால் நீங்கள் ஏழைகளுக்குப் பிச்சை கொடுக்கும்பொழுது தாரை ஊதுவித்து அதைப் பிரசித்தம்பண்ண வேண்டாம். மாயக்காரர் தங்களுக்கு மனிதர்களாற் புகழ்ச்சியுண்டாகும்படிக்கு ஆலயங்களிலேயும் வீதிகளிலேயுந் தாங்கள் பிச்சை கொடுக்கும்பொழுது தாரை ஊதுவிக்கிறார்கள். அவர்களுக்கு அந்தப் புகழ்ச்சியே அல்லாமல் வேறு பலன் கிடையாதென்று உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்களோவெனிற் மனிதர்களுடைய புகழ்ச்சியைத் தேடாமல் இரகசியமாய் உங்கள் தருமங்களைச் செய்யுங்கள். அப்பொழுது இரகசியங்களை அறிகிற பரமபிதாவானவர் உங்களுக்குப் பலன் அளிப்பார்.

மேலும் நீங்கள் வேண்டுதல் பண்ணுகிறபொழுது மாயக்காரர் செய்வதுபோற் செய்ய வேண்டாம். அவர்கள் பிறருக்கு வியப்ப

க ஆலயங்களிலேயுந் தெருச்சந்திகளிலேயும் நின்று வேண்டுதல் பண்ண விரும்புகிறார்கள். அவர்களுக்கு அந்த வீண் புகழ்ச்சியேஅல்லாமல் வேறு பலன் கிடையாதென்று உண்மையாய் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்களோ வேண்டுதல் பண்ணும்பொழுது வீட்டில் அறைக்குட் போய்க் கதவைப் பூட்டிப் பரமபிதாகிய பராபரனை நோக்கி வேண்டுதல் பண்ணுங்கள். அப்பொழுது இரகசியங்களை அறிந்திருக்கிற அவர் உங்கள் வேண்டுதலின்படியே பலன் அருளிச்செய்வார். அல்லாமலும் நீங்கள் வேண்டுதல் பண்ணும் பொழுது அஞ்ஞானிகளைப் போல வீண் வசனங்களை மிகுதியாய் எடுத்துச் சொல்லாதிருங்கள். அஞ்ஞானிகள் அப்படிச் சொல்வதினாற் பலனடையலாமென்றெண்ணுகிறார்கள். நீங்கள் அவர்களைப்போலிருக்க வேண்டாம். நீங்கள் வேண்டுதல் பண்ணுகிறதற்கு முன்னமே இன்னவின்ன உங்களுக்கு வேண்டுவனவென்று அவர் அறிந்திருக்கிறபடியால் நீங்கள் வீண் வசனங்களைச் சொல்லாமல் உண்மையுடனேயும் இப்படியே வேண்டுதல் பண்ணக்கடவீர்கள். எப்படியெனில்,

பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே பூலோகத்திலுள்ள சகலரும் உம்முடைய பரிசுத்த குணங்களை அறிந்து உம்மை உண்மையாய்த் தொழுதுகொள்ளக்கடவர்கள். தேவரீருடைய ஆளுகைக்கு எல்லாரும் உட்பட்டு உமக்குக் கீழ்ப்படியக் கடவர்கள். பரமண்

டலங்களிலுள்ள பரிசுத்த அரூபிகள் எல்லாரும் உம்முடைய திருச்சித்தத்தின்படி செய்து நடக்கிறதுபோல இந்தப் பூமியிலெங்குமுள்ள எல்லா மனிதர்களும் அப்படிச் செய்து நடக்கக் கடவர்கள். அல்லாமலும் எங்களுக்கு வேண்டிய அன்னவஸ்திரங்களையுந் தேவரீர் எங்களுக்கு இன்று தாரும். மனிதர் எங்களுக்குச் செய்த குற்றங்களை நாங்கள் மன்னிக்கிறது போல நாங்கள் உமக்குச் செய்த குற்றங்களையுந் தேவரீர் மன்னித்தருளும். பாவஞ் செய்வதற்கான காரணங்களுக்கு நாங்கள் இடங்கொடாமலிருக்கும்படி செய்து பொல்லாங்கினின்றும் எங்களை இரட்சித்துக்கொள்ளும். தேவரீருக்கே நித்திய ஆளுகையும் வல்லமையும் மகிமையும் உண்டாயிருக்கின்றன.

இவ்விதமாக நீங்கள் பராபரனைத் தோத்திரித்து உங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் வேண்டுதல் பண்ணக்கடவீர்கள். விசேஷமாய்ப் பிறர் உங்களுக்குச் செய்த தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னிக்கவேண்டும். அப்படி மன்னித்தாற் பரமபிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னிப்பார். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானாற் பரமபிதாவும் உங்களுக்கு மன்னிக்கமாட்டார்.

பின்னும் உபவாசம் பண்ணுகிறபொழுது நீங்கள் மாயக்காரரைப்போல முகவாட்டங்கண்டிராதிருங்கள். அவர்கள் உபவாசம் பண்ணும் பொழுது மனிதர் தங்களைப் புகழும் படிக்குத் தங்கள் முகங்களை வதங்சப்பண்ணுகி

றார்கள். அவர்களுக்கு அந்தப் புகழ்ச்சியேயல்லாமல் வேறு பலன் வராதென்று உண்மையாய் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்களோ வெளியில் மனிதர் காணும்படி புறம்பான அடையாளங்களைக் காண்பியாமல் என்றும்போலத் தலைக்கு எண்ணெய் பூசி முகத்தைக் கழுவி வெளியே வரக்கடவீர்கள். அப்பொழுது இரகசியத்தை அறிந்திருக்கிற பரம பிதாவானவர் உங்களுக்குப் பலன் அருளிச்செய்வார்.

பின்னும் பொன் வெள்ளி முதலான அநித்திய லோகப் பொருள்களின்மேற் பேராசை வைத்தீர்களேயானாற் பராபரனையும் அவரிடத்திலுள்ள நித்திய மோட்சத்தையும் இழந்துபோவீர்கள். ஏனென்றால் மனிதர்கள் எதைத் தங்கள் பொக்கிஷமென்று எண்ணுகிறார்களோ அதையே ஆசைப்பட்டிருப்பார்கள். அப்படியே உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். ஆகையால் இந்தப் பூமியிலுள்ள பொக்கிஷங்களை நீங்கள் சேர்த்து வைக்கவேண்டாம். பூச்சியுங் கறையும் அவைகளைக் கெடுக்குமே. திருடரும் வந்து திருடுவார்களே. பரமண்டலத்திலே நீங்கள் உங்களுக்காக நித்திய பொக்கிஷங்களைச் சேகரித்து வைக்கவேண்டும். அங்கே பூச்சிகள் கெடுக்கவும் மாட்டாது. திருடர் கன்னமிட்டுத் திருடவும் மாட்டார்கள். பரமண்டலத்திலுள்ள பாக்கியத்தை அடையக் கவலைப்படுவீர்களானால், மரணத்துக்குப் பின்பு அவைகளை மோட்ச இராச்சியத்திலடைந்து அனுபவிப்பீர்கள்

அநேகர் புத்தியீனராய் அழியாத பரம பொ
க்கிஷத்தை விட்டு அழிந்து போகும் உ
லகப் பொருளையே தேடுகிறார்கள். நீங்கள்
அப்படிச் செய்யாதபடி தெளிந்த புத்தியு
டையவர்களாய் இருக்கவேண்டும். கண்ணான
து சரீரத்துக்கு விளக்காயிருக்கிறது போலப்
புத்தியானது ஆத்துமாவுக்கு விளக்காயிருக்கி
ன்றது. உங்கள் கண் விளக்கமுள்ளதாயிருந்
தால் உங்கள் சரீரம் முழுதும் வெளிச்சமடை
ந்திருக்கும். அதுபோல உங்கள் புத்தி நேரா
யிருக்குமேயானால் உங்கள் ஆத்துமாவுக்கும்
வெளிச்சமுண்டாயிருக்கும். அல்லது உங்க
ள்கண் இருளடைந்திருந்தால் உங்கள் சரீரமு
ழுதும் இருளடைந்திருக்கும். உங்கள் புத்தி
தெளிவற்றதானால் உங்கள் ஆத்துமாவுந் தெளி
வற்றதாய் அழியாத பொருள்களையும் அழிந்
துபோகும் பொருள்களையும் பகுத்தறியாதி
ருக்கும். அப்படி உங்களுக்கு வெளிச்சமாயி
ருக்க வேண்டியது இருள் அடைந்ததாயிருந்தா
ல் எல்லாம் இருளாயிருக்கும் அல்லவோ? அ
ழியாத பொருள்களையும் அழிந்துபோகும்
பொருள்களையும் ஒன்றாய்த் தேடக் கூடுமென்
று நினைத்துக்கொள்ளாதிருங்கள். ஒருவன்
இரண்டெசமான்களுக்கு அடிமைப்பட மாட்
டான். அவன் ஒருவனைப் பார்க்கிலும் ஒருவ
னை நேசிப்பானே. அல்லது ஒருவனைப் பற்றி
க்கொண்டு மற்றவனை விட்டுவிடுவான். அது
போல நீங்கள் பராபரனையும் உலகப் பொரு
ளையும் ஒன்றாய்ப் பற்றியிருக்கக் கூடாது. நீங்

கள் பராபரனுக்குப் பண்செய்து உண்மை
யாயுஞ் சாக்கிரதையாயும் நடந்தால் அவர் உ
ங்களைக் கைவிடமாட்டார். ஆகையால் உங்கள்
ஜீவனத்துக்காக என்ன சாப்பிடுவோம் என்ன
பானம் பண்ணுவோம் என்றும் உங்கள் சரீரத்
துக்காக என்ன உடுப்போமென்றுங் கவலைப்
படாதிருங்கள். சாப்பாட்டைப் பார்க்க உங்க
ள் ஜீவனும் உடுப்பைப் பார்க்க உங்கள் சரீரமு
ம் அதிகமல்லவா! அப்படியிருக்கப்பட்ட ஜீவ
னையுஞ் சரீரத்தையுங் கொடுத்த பராபரன் அ
வைகளைக் காக்கும்படிக்கு வேண்டிய அன்ன
வஸ்திரங் கொடாமலிருப்பாரா! ஆகாசத்திற்
பறக்கிற பறவைகளைப் பாருங்கள். அவைகள்
தானியங்களை விதைக்கிறது அறுக்கிறதுமில்
லை. களஞ்சியத்திலே சேர்த்து வைக்கிறமில்
லை. அப்படியில்லாதிருந்தும் பரமண்டலத்தி
லுள்ள உங்கள் பிதாவானவர் அவைகளுக்கு உ
ணவைக் கொடுக்கிறார். அவைகளைப்பார்க்க நீங்
கள் விசேஷமுள்ளவர்களல்லவா! உங்களில்
ஒருவன் கவலைப் படுகிறதினாலே தனக்கு உள்ள
அளவுக்கு மேலே ஒரு முழத்தைக் கூட்டிக்
கொள்ளக் கூடுமா! கூடாதே. அப்படியிருக்க
உடுப்புக்காக ஏன் கவலைப்படுகிறீர்கள்! வெளி
யிலுள்ள லிலியென்னும் புஷ்பங்களைப் பாரு
ங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கி
றதுமில்லை. ஆகிலும் அவைகள் மிகவும் அழகா
ய் வளருகின்றன. சாலமோன் மிகுந்த அழ
கையுடைய இராசனாயிருந்தும் அந்தப் புஷ்ப
ங்களைப்போல அழகுபெற உடுத்திருந்ததில்லை.

இப்படியே ஒருநாளிருந்து மறுநாள் நெருப்பிலே போடப்படும் புல்லுக்களைப் பராபரன் முக்கியமாய்ச் சிறப்பித்தாரானால் மிகவும் அதிகமாய் உங்களைச் சிறப்பிப்பாரல்லவா? அற்பவிசுவாசிகளே, என்னத்தைப் போசனம் பண்ணுவோமென்றும் என்னத்தைப் பானம் பண்ணுவோமென்றும் என்னத்தை உடுப்போமென்றும் அஞ்ஞானிகள் கவலையாய்த் தேடுகிறதுபோல நீங்கள் கவலைப்படாதிருப்பீர்களாக. உங்கள் பரமபிதாவானவர் இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டுமென்று அறிந்திருக்கிறார். ஆகையால் நீங்கள் பராபரனுடைய இராச்சியத்திலே சுதந்தரர்களாகவும் அவருக்குப் பிரியமான நீதிமான்களாகவும் இருப்பதையே முதலாவது சாக்கிரதையாய்த் தேடுங்கள். அப்பொழுது உங்கள் சீவனத்துக்கு வேண்டிய அன்னவஸ்திரங்கள் உங்களுக்கு அருளிச்செய்யப்படும். ஆதலால் நீங்கள் பராபரனை உண்மையாய் நம்பி நாளையித் காரியத்துக்காக இன்றைக்குக் கவலைப்படாதிருங்கள். நாளைக்கு வேண்டிய காரியங்களுக்காக நாளைக்குத்தானே கவலைப்படலாம். இன்றைக்கு உண்டாயிருக்கிற வருத்தம் இன்றைக்குப் போதுமே.

நீங்கள் மற்றவர்களை எப்படி எண்ணுவீர்களோ அப்படி நீங்களும் எண்ணப்படுவீர்கள். அல்லாமலும் எந்த அளவால் நீங்கள் அளப்பீர்களோ அதினாலே உங்களுக்கும் அளப்பார்கள். ஆகையால் நீங்கள் ஒருவரையுங் குற்றவாளிக

ளென்றெண்ணுதிருங்கள். எண்ணினுல் உங்களை யும் குற்றவாளிகளென்றெண்ணுவார்கள். மேலும் நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைப் பாராமற் பிறனுடைய கண்ணிலிருக்கிற சிராயைப் பார்க்கிறதென்ன? உத்திரமே உன் கண்ணிலிருக்கையில் நீ பிறனை நோக்கி உன் கண்ணிலிருக்கிற சிராயை நான் எடுத்துப் போடுகிறேன் விடென்று சொல்வதென்ன? வஞ்சகனே, முதலாவது நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு பிறனுடைய கண்ணிலிருக்கிற சிராயை எடுத்துப்போட நன்றாய்ப் பார்ப்பாய். அப்படியே நீங்கள் அன்யாயும் நியாயமாயும் பிறனுடைய குற்றங்களை எண்ணுகிறதற்கும் அவனைச் சீர்திருத்துகிறதற்கும் இடமாயிருக்கும்.

அல்லாமலும் நல்லமுத்துக்களுக்கு ஒப்பான உங்கள் ஞானத் திரவியங்களை நீங்கள் பன்றிகளைப்போலத் தகாத இச்சையும் அசுத்தமுமுள்ளவர்களுக்கு முன்பாக வைக்க வேண்டாம். வைத்தால், அவர்கள் உங்கள் பரிசுத்தமான திரவியங்களை எண்ணுமல் அசட்டைபண்ணி உங்களையும் துன்பப்படுத்துவார்கள். ஆகையால் நீங்கள் பிறருடைய தன்மையை நன்றாய் வகையறுத்துப் பார்க்கத் தக்க அறிவுந் திராணியும் உங்களுக்கு உண்டாகும்படிக்கு நீங்கள் பராபரனை நோக்கி வேண்டுதல்பண்ண வேண்டும். அப்பொழுது அவர் அவைகளை உங்களுக்கு அருளிச்செய்வார். உடனே அருளிச்செய்யாதிருந்தாலும் நீங்கள் ஒரு முக்கிய

மான் பொக்கிஷத்தைத் தேடுகிறவனைப்போல
மென்மேலும் அதிக உண்மையோடே வேண்
டுதல் பண்ணவேண்டும். அப்படியே வேண்
டுதல் பண்ணிக் கேட்கிறவன் பெற்றுக்கொள்
வான். தேடுகிறவன் கண்டடைவான். தட்டுகிற
வனுக்குத் திறக்கப்படும் அதைக் குறித்து நீ
ங்கள் சந்தேகப்படவேண்டாம். உங்களில் ஒ
ருவன் தன்னிடத்திலே அப்பங் கேட்கிற தன் ம
கனுக்குக் கல்லைக்கொடுப்பானோ! அல்லது மீ
னைக் கேட்டாற் பாம்பைக் கொடுப்பானோ!
கொடுக்கமாட்டானே பொல்லாதவர்களாகி
ய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கொடை
களைக் கொடுப்பீர்களேயானால் மிகவும் நல்ல
வராகிய பரமபிதா எத்தனை அதிகமாய் உங்க
ளுக்கு நன்மைகளைக் கொடுப்பார். அன்றியு
ம் மனிதர் எவைகளை உங்களுக்குச் செய்ய வி
ரும்புகிறீர்களோ அவைகளையே நீங்களும் அ
வர்களுக்குச் செய்யக்கடவீர்கள். நியாயப்பி
ரமாணமுந் தீர்க்கதரிசிகள் சொன்னவைகளு
ம் இந்தக் கட்டளையிலே அடங்கியிருக்கின்றன.
கேட்டுக்குக் கொண்டுபோகிற வாசல் விரிவா
யும் வழி விசாலமுமாயும் இருக்கின்றது. அல்
லாமலும் அந்த வழியாய்ப் பிரவேசிக்கிறவர்
கள் அநேகர். ஆதலால் இடுக்கமான வாசல்வ
ழியாய்ச் சீவனிற் பிரவேசியுங்கள். சீவனுக்கு
க் கொண்டுபோகிற வாசல் மிகவும் இடுக்கமா
யும் வழி நெருக்கமாயும் இருக்கின்றது. சில
ர்மாத்திரம் அதைக் கண்டடைகிறார்கள்.

மேலும் ஆட்டைப் போலச் சாயலும் கோ

ஞாயின் குணமு முடையவர்களாய் உங்களிட
த்திற்கு வருகிற கள்ளப் போதகர்களுக்கு நீங்
கள் இடங்கொடாமல் எச்சரிக்கையாயிருங்கள்.
நீங்கள் அவர்கள் கிரியைகளை உற்றுப்பார்த்து
அவைகளினாலே அவர்கள் குணத்தை அறியக்
கடவீர்கள். முட்செடிகளிலே முந்திரிகைப்
பழங்களையும் முட்பூண்டுகளில் அத்திப் பழங்
களையும் பறிக்கலாமா? நல்ல மரமானது தீய
கனிகளையுந் தீயமரம் நல்ல கனிகளையுங் கொ
டுக்கமாட்டாதே. அதுபோலத் துற்குணமு
டைய கள்ளப் போதகரிடத்தில் நீங்கள் பரி
சுத்தமான கிரியைகளைக் காணமாட்டீர்கள். ஆ
கையால் அந்தக் கள்ளப் போதகரை அவர்க
ளுடைய கிரியையினாலே அறிவீர்கள். மே
லும் நல்ல கனிகளைக் கொடாதிருக்கிற மரம்
வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். அ
துபோல நற்கிரியைகளைச் செய்யாதிருக்கிற ம
னிதர்களுக்குஞ் சம்பவிக்கும்.

நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்
லிய கற்பனைகளின்படியே நீங்கள் செய்து எ
ன்னைப் பின்பற்றக் கடவீர்கள். என்னத்தினா
லெனில் என்னைக் கத்தாவே, கத்தாவே, என்று
சொல்லுகிற எவருமல்ல, பரமண்டலத்திலு
ள்ள என் பிதாவின் சித்தம்போல நடக்கிறவர்
களே அதிற் பிரவேசிப்பார்கள். கடைசி நி
யாயத்தீர்ப்பு நாளிலே அநேகர் என்னுடனே
கத்தாவே, உம்முடைய திருநாமத்தினாலே பசா
சுகளைத் துரத்தினோமே. தீர்க்கதரிசனங்களைச்
சொன்னோமே. எங்களையும் மோட்ச இராச்

யெத்திலே சேர்த்துக்கொள்ளுமென்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறிந்ததில்லை. அக்கிரமக்காரரே என்னை விட்டுப் போங்களென்று அவர்களுடனே சொல்லுவேன். ஆகையால் நான் சொல்லிய உபதேசங்களை ஒருவன் கேட்டு அவைகளைக் கைக்கொண்டால் அவனை மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்திவானுக்கொப்பிடுவேன். அவனுடைய வீடு கன்மலையின்மேற் கட்டியிருந்தபடியினாலே பெருமழை சொரிந்து வெள்ளம் வந்தும் காற்றுகள் அடித்து அதின் மேலே மோதியும் அது விழுந்ததில்லை. நான் சொல்லிய உபதேசங்களை ஒருவன் கேட்டும் அவைகளின்படி செய்யாதே போனால் அவன் தன் வீட்டை மணலின் மேற் கட்டின புத்தியீனனுக்கு ஒப்பாயிருப்பான். அது மணலின் மேற் கட்டியிருந்தபடியினாலே பெருமழையும் பெருவெள்ளமுங் காற்றுக்களும் வந்து அதின் மேலே மோதின பொழுது அது அடியோடே பாறி விழுந்து போயிற்று. ஆதலால் நீங்கள் மேற் சொல்லிய புத்தியீனனுக் கொப்பாயிராமற் புத்தியுள்ளவனுக்கே ஒப்பாயிருக்கக் கடவீர்களென்று திருவுளம்பற்றினார்.

இயேசுநாதர் மலையின் மீது சொல்லிய இந்தப் பிரசங்கத்தில் எவரெவர்களும் அறிந்து கைக்கொண்டு நடக்கவேண்டிய நற்புத்திகள் பலவுண்டு. அவைகளில் விசேஷித்த சிலவற்றை யெடுத்துச் சிந்தித்துப் பார்ப்போமாக.

பராபரன் நமது வெளியான காரியங்க

ளை மாத்திரமல்ல, உள்ளான இருதயத்தின் குணங்களையும் விருப்பங்களையும் உற்றறிகிறாரென்பது விளக்கமாக யாவருக்குந் தெரியும். மேலுந் தீமையான ஒவ்வொரு வார்த்தைகளுஞ் செய்கைகளுங் கத்தாவுக்கு வெறுப்பாயிருப்பதுபோலப் பாவமான குணங்களும் நினைவுகளும் அவருக்கு வெறுப்பாய் இருக்கின்றன. எப்படியெனில் நியாயமில்லாத கோபந்தானே கொலைக்கேதுவாயிருக்கிறதினாலே அந்தக் கோபக் குணத்தைக் கொண்டிருக்கிறவனைக் கொலைபாதகனென்றுங் காமவிகாரம் விபசாரத்துக்கு ஏதுவாயிருக்கிறதினாலே அதைக் கொண்டிருக்கிறவனை விபசாரனென்றும் பராபரன் எண்ணி நிச்சயித்துத் தீர்ப்பாரென்கிறதாகக் காண்கின்றது.

இன்னும் நாமெல்லாரும் இப்படிப்பட்ட பாவக் குணமும் பாவச் செய்கையுமுடையவர்களாயிருக்கிறதினாற் பரிசுத்த பராபரனுக்கேற்றவர்களாகவும் மோட்சத்துக்கு உரியவர்களாகவும் நமக்கு ஒரு இரட்சகர் வேண்டுமே. அப்படி நமக்கு இரட்சகராகக் கிறிஸ்துநாதர் தாமே இவ்வுலகத்தில் வந்து பாவ நிவாரணம் பண்ணித் தம்மை விசுவாசிக்கிற எவனுங் கெட்டுப்போகாமல் நித்தியவாழ்வை அடையும்படி செய்தார். அவரே பாவிகளாகிய மனிதருக்குவேண்டிய இரட்சகர். அவர் மூலமாகவே பரிசுத்த ஆவியானவர் தம்மைத் தேடுகிறவர்களுடைய நெஞ்சைச் சுத்திகரித்து அவர்களை மோட்சத்துக்கேற்ற குணமுள்ளவர்களாக்குகிறார்.

கர்த்தரை நோக்கி உண்மையான வேண்டுதல் செய்ய வேண்டுமென்பது பிறர் காணவுங் கேட்கவுந் தக்கதாகவாயினுந் பல வார்த்தைகளைச் சொல்லாமல் அந்தரங்கத்திலே மனப் பத்தியோடும் உண்மையோடும் பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலே நெஞ்சிற் பிறக்கும் நல்ல விருப்பங்களைக் கிறிஸ்துநாதரை முன்னிட்டுப் பராபரனிடத்திற் செலுத்துவதே உண்மையான வேண்டுதலென்று காண்கின்றது. இப்படிப்பட்ட வேண்டுதலே பராபரனுக் கேற்றதும் அவர் கிறிஸ்துவினிமித்தமாகக் கேட்டுக் கிருபைசெய்வதுமாயிருக்கின்றது. கிறிஸ்துநாதரையின்றிப் பராபரனிடத்திற் சேர்வதும் அவரை மன்றாடுவதும் ஒவ்வாத காரியமாயிருக்கும்.

உலக மயக்கங்களிலே அகப்படாமல் நமது நெஞ்சைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து உண்மையுடனே அவருக்கு வழிபாடு செய்யவேண்டுமென்பது. கர்த்தரே நம்மைப் படைத்துக் காப்பாற்றி நமக்கு வேண்டிய இவ்வுலக நன்மைகளை அருளுகிறதுமன்றி மறுமையிலே மோட்ச வாழ்வையும் அடைகிறதற்கான வழியை உண்டாக்கி இருப்பதினால் அந்த மோட்சத்தைப் பெறும்படி விரும்பி இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் அதை உண்மையாகத் தேடி நம்மை இரட்சிக்கும்படிக்கு அவர் செய்திருக்கிறதை நினைத்து நன்றியறிந்தவர்களாய் அவரை நேசித்து அவருடைய சித்தத்திற்கு அமைந்து பிறருக்கும் இரட்சிப்பின் வழியை வி

ளங்கும்படி நம்மாற் கூடியமாத்திரம் பிரயாசப்பட்டு அவைகளை அவர்களுக்கும் வெளிப்படுத்திக் கர்த்தாவுக்குத் தொண்டுசெய்ய வேண்டியது.

இதை வாசிக்கிறவர்களே, இம்முறைப்படி நீங்களும் நடப்பது உங்கள் கடமையென்று அறிவீர்களாக.

---

மத்தேயு. ௰௩. அதி. ௨௪—௩௰. ௩௬—௪௩.
[Matthew. XIII. 24—30. 36—43.]

பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக்காட்டினார்.—அதாவது பரலோக இராச்சியம் ஒரு வயல்நிலத்துக்கு ஒப்பாயிருக்கின்றது. அந்த நிலத்திலே எசமானானவன் நல்லவிதையை விதைத்தான்.—பின்பு மனிதர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய பகைஞன் வந்து கோதும்பைக்குள்ளே களைகளை விதைத்துப் போனான்.—பயிரானது வளர்ந்து தானியத்தை உண்டாக்கின பொழுது அந்தக் களைகளுங் காணப்பட்டன.—வேலைக்காரன் எசமானிடத்தில் வந்து ஆண்டவனே, நீர் உமது வயல்நிலத்திலே நல்லவிதையை விதைக்கவில்லையா? களைகள் அதிலே எப்படி உண்டாயின வென்றார்கள்.-அதற்கவன் பகைஞன் அப்படிச் செய்தானென்றான். அப்பொழுது வேலைக்காரர் நாங்கள்போய் அவைகளைப் பிடுங்கிப் போடச்சித்தமாயிருக்கிறீரோ? என்றுகேட்டா

ர்கள்.—அதற்கவன் சொன்னது, வேண்டாம். களைகளைப் பிடுங்குகிறபொழுது நீங்கள் கோதும்பையையுங் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு,— அவ்விரண்டையும் அறுப்புக்காலம் வரைக்கும் வளர விடுங்கள். அறுப்புக்காலத்திலே அறுக்கிறவர்கள் முதலாவது களைகளைப்பிடுங்கி அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுக்களாகக் கட்டவுங் கோதும்பையை என் களஞ்சியத்திற் சேர்க்கவுங் கட்டளை இடுவேனென்று சொன்னனென்றான்.

அப்பொழுது இயேசுவானவர் சனங்களை அனுப்பின பின்பு வீட்டுக்குப்போனார். அங்கே அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து நீர் வயல் நிலத்தின் களைகளைக்குறித்துக் காட்டின உவமையை எங்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள்.— அவர்களுடனே அவர் மறுமொழியாகச் சொன்னதாவது, நல்லவிதையை விதைக்கிறவன் மனிதனுடைய குமாரனே. வயல்நிலம் உலகமே.—நல்லவிதை இராச்சியத்தின் புத்திரரே. களைகள் பொல்லாங்கனுடைய புத்திரரே.—அவைகளை விதைக்கிறபகைஞன் பசாசே. அறுப்பு உலகத்தின் முடிவே. அறுக்கிறவர்கள் தேவதூதர்களே.—ஆதலாற்களைகள் சேர்க்கப்பட்டு அக்கினியிலேற் சுட்டெரிக்கப் படுகிறதுபோல இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.—மனிதனுடைய குமாரன் தன்னுடைய தூதரை அனுப்புவான். அவர்கள் அவனுடைய இராச்சியத்திலிருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்க

ளையுஞ் சேர்த்து,—அழுதலும் பற்கடிப்புமு
ண்டாயிருக்கிற அக்கினிச் சூளையிலே போடு
வார்கள் —அப்பொழுது நீதிமான்கள் தங்கள்
பிதாவின் இராச்சியத்திலே சூரியனைப்போலப்
பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ள
வன் கேட்கக்கடவன்.

முற்றிற்று.